Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணி மாதம் 28 உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத். கூ௩] யாழ்ப்பாணம்:- கரவருஷ ஆனிமீ உ௬உ செவ்வாய்க்கிழமை (10 ஜூலை 1951) [இல. உ௭]

உ

## தோத்திரம்

புகழுந்தமிழ் மதுரேசர் பொலன் சேவடி பணிவார்
திகழுங்கடல் வையந்தொழு தெய்வந்தனை நிகர்வார்
இகழுங்குல மிலராயினும் நிலைகோடின ரெனினும்
இகழுந்தொழி லினராயினு மெவராயினு மவரே

உலகத்திலே வழங்கப்படும் உயர்ந்தகுலத்தாரல்லாதவர், ஒழுக்க நிலையினின்ற திறம்பியவராயினும், அவமதிக்கப்படுகின்ற ஈனமான தொழிலையுடையவராயிருந்தாலும், வேறு எவ்வகையான குற்றங்களுடையவரானாலும், அவர் பாராட்டப்படுகின்ற தமிழ் வழங்கும் மதுராபுரியிற் கோயில்கொண்டருளிய சொக்கலிங்கப்பெருமானுடைய பொன்போன்ற திருவடிகளை வணங்குவதனால், விளங்குகின்ற கடல்சூழ்ந்த இப் பூவுலகத்திலே தெய்வத்தை நிகர்ப்பவராவர் என்பதுபொருள்.

இகழுங்குலமிலராயினும் .... ... ... .... அவரே ...... தெய்வந்தனை நிகர்வார் எனக்கொண்டுகூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. குலமிலரேனுங் குணமிலரேனும் புலைத்தொழில்புரிபவரேனும் வேறு குற்றங்களைச் செய்பவரெனினும் மதுரைப் பெருமானுடைய திருவடிகளை வணங்குபவர் தெய்வத்தோடு வைத்தெண்ணப்படுவர் என்றபடி. இகழுந்தொழில் - இகழப்படுந்தொழில், புலைத்தொழில் முதலியன. (89)

## சைவப் பிரசங்கர்

கழிந்த ஆனிமீ ௧௬உ (30-6-51) சனிக்கிழமை இரவு 7 மணியளவில் காரைநகர் கருங்காலிச் சுப்பிரமணியசுவாமி ஆலயத்தில் பிரம்மஸ்ரீ C. S. மணிஐயர் சிறுத்தொண்ட நாயனாரின் திவ்விய சரித்திரத்தைப் பிரசங்கஞ் செய்தார்கள்; மேலும் பிரசாரகர் சைவ அன்பர்கள் சிவனடியார்களிடத்துப் பக்தியுடையவர்களாயிருந்தால் இறைவனின் திருவருளைப் பெறலாமென்பதை வற்புறுத்தி வைத்தார்கள். —நிருப

## புதிய 10 சத முத்திரைகள்

வருகிற ஆகஸ்ட்மீ 1 உ தொடக்கம் புதிய முறையில் அச்சிட்ட 10 சத முத்திரைகள் உபயோகத்திற்கு வருவாம். இப்பொழுதுள்ள 10 சத முத்திரைகள் எஞ்சியிருந்தால் அவைகளையும் உபயோகிக்கலாமாம்.

## கெந்தகம் தயாரிக்க புதிய வழி

சுட்ட நிலக்கரி வாயுக்களிலிருந்து வருடமொன்றுக்கு 60000டன் கெந்தகம் தயாரிப்பதற்கான புதிய முறையொன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இம்முறை பயனளிக்குமா என்பது விரைவில் சோதனை செய்யப்படவிருக்கிறது. இது வெற்றிபெற்றால் பிரிட்டன் தனது அமெரிக்க கெந்தக இறக்குமதிகளில் ஏழில் ஒருபங்கைச் சேமிக்கமுடியும்.

## கால நிலை

சென்ற சனிக்கிழமையிரவு இந்த வண்ணார்பண்ணைப் பகுதியில் ஒரு "பாட்டம்" மழைபெய்தது; சில மாசங்களாக மழையில்லாமலிருந்த இப்பகுதியில் மழைபெய்தமை நன்மையாகும்; இடையிடையே இன்னமும் மழைக்கோலங் காணப்படுகின்றது.

## துணிகரமான களவு

பருத்தித்துறை உபதபால் நிலையத்தில் வந்து நின்ற, கொழும்புப் பெரிய தபால் ஸ்தானத்திற்குரிய "வான்" எனப்படும் இரதத்தை அதனகத்துள்ள கடிதப்பைகள், பணம் முதலிய பொருள்களுடன், அந்த வானின் சாரதியும் காவலனும் இல்லாத சமயம்பார்த்து யாரோ திருடர் வானைச் செலுத்திக்கொண்டுபோய் விட்டார்களாம்; இது சென்ற வியாழக்கிழமை நேர்ந்தது: ஆனால் அன்றயினமே குறித்த வான் "கார்ஸ் ஆ கார்டின்" என்னுமிடத்தில் விட்டிருக்கக் காணப்பட்டது; கடிதங்கள்கொண்ட பைகளுள் இரண்டு தவிர மற்றவைகளெல்லாம் வெட்டப்பட்டுக்கிடக்கக் காணப்பட்டனவாம். ஆறாயிரம்ரூபாகொண்ட பணம் திருடப்பட்டுவிட்டதாம். திருடரைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளெல்லாம் பொலிசாரால் செய்யப்படுகின்றன; குறித்த வானின்சாரதியுங் காவலனும் விளக்கமறியலிலிருக்கின்றனர்.

## 1200 இந்தியர் நாட்டுக்கு மீட்டனுப்பப்பட்டனர்

இந்த ஆண்டு ஜனவரி தொடக்கம் ஜூன் மாசம் முடிவுவுள்ள காலத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சோரமாகவந்து கண்டுபிடிக்கப்பட்டு மீட்டு இந்திய நாட்டிற்கு அனுப்பப்பட்ட மக்களின் தொகை 1200 வரையிலிருக்குமெனக் கணக்கிடப்படுகிறது.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

# சைவ சமயத் தொண்டுகளைக் கூட்டுறவால் விருத்தி செய்தல்

(திரு. S. சிவசுப்பிரமணியம்
காரியதரிசி திருக்கேதீசுவர ஆலயப் புனருத்தாரண சபை)

சைவர்களின் ஆக்கத்துக்குரிய தொண்டுகளை உறுதி பயக்கவேண்டுமாயின் அவர்களுக்குள் ஒற்றுமையும் கூட்டுறவும் நிலவவேண்டும் ஒரு சைவத் தொண்டை ஆற்றத் தொடங்கும் பொழுது அதற்குத் துணை புரியக் கூடியவர்களுடைய பெயர்களும் சாதனங்களும், அத்தொண்டைப் புரிகின்றவர்கட்குத் தெரியவேண்டும். அவற்றை அறிந்து, அவ்வுதவிகளைப் பெற்று அத்தொண்டைப் புரியும்பொழுது அது சித்தியடையும்.

சைவத் தொண்டுகளைப் புரியும் பொழுது துணை புரியக்கூடியவர்களைப்பற்றிய விபரங்கள் தெரியாவிடின அறிந்தவர்கள்மூலம் அவற்றைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். இக்காலத்திற் சைவத்தொண்டுகளை புரிதற்கு உதவி புரியப் போதிய ஆண் பெண் தொண்டர்கள் இன்மையாலும், பொருள் இன்மையாலும், பக்தியின்மையாலும், சைவத்தொண்டுகள் நற்பயன் அளிக்கக் காண்கிறோமில்லை.

சைவத் தொண்டில் ஆர்வமுள்ளவர்கட்கிடையில் ஒற்றுமை நிலவுதல் வேண்டும். அதேபோல் சைவத் தொண்டு புரியும் சபைகட்கிடையிலும் பரஸ்பர ஒற்றுமை இருத்தலவசியம். இவைகளனைத்தும் ஒன்றோடொன்று தொடர்புற்றிருத்தலவசியம்.

இந்நோக்கத்தைப் பூர்த்தி செய்தற்கு உங்கள் பத்திரிகை வாசகர்களைக் கீழ்க்காணும் விபரங்களை எமக்குத் தெரிவிக்கும்வண்ணம் விநயத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

1 சைவசமயப் பிரசங்கங்களைக் கேட்பதற்கு விருப்பமுடையவர்களுடைய பெயரும் விலாசமும் (அடிக்கடியாக ஒரு பிரசங்கத்தைப் பற்றித் தங்களுக்கு அறிவித்தல் கிடைக்கவில்லையென்று பலர் கூறுகிறார்கள். தபால்மூலம் தெரிவித்துவிடின் இக்குறை நீங்கிவிடும்.)

2 சைவப் பிரசங்கங்களை வாரந்தோறும் ஒழுங்கு செய்யக்கூடியவர்களுடைய பெயரும் விலாசமும்.

3 சைவக் கூட்டங்கட்கு மக்களைப் பெருந்தொகையாகச் சமுகமளிக்கச் செய்யக் கூடியவர்களின் பெயரும் விலாசமும்.

4 சமயத்தொண்டில் ஈடுபட்டிருப்போரின் பெயரும் விலாசமும்.

5 தமிழிலும், ஆங்கிலத்திலும் கதாப்பிரசங்கம் சாதாரண பிரசங்கம் செய்யக்கூடிய பிரசாரகர்களுடைய பெயரும் விலாசமும்.

6 தேவார திருவாசகங்களை முறையாக ஓதக்கூடிய ஓதுவார்களின் பெயரும் விலாசமும்.

7 சைவசாஸ்திரங்களிற் பயிற்சியுள்ள சைவக்குருமாரினதும், சைவ ஆசிரியர்களினதும் பெயரும் விலாசமும்.

8 சைவக்கிரியைகளும் விழாக்களும் நடத்தக்கூடியவர்களின் பெயரும் விலாசமும்.

9 சைவக் கூட்டங்களின் நிகழ்ச்சிகளையும் வரலாறுகளையும் பத்திரிகைகட்கு எழுதி உதவக்கூடிய நிருபர்களின் பெயரும் விலாசமும்.

10 சைவசமய சம்பந்தமான கட்டுரைகளை எழுதி உதவக்கூடியோரின் பெயரும் விலாசமும்.

11 சைவசபைகளினதும், சைவ வித்தியாசாலைகளினதும் பிற சைவ ஸ்தாபனங்களினதும் அட்டவணை.

12 சைவ ஆலயங்களினதும் மடங்களினதும் அட்டவணை.

13 சைவசமய வெளியீடுகளினது அட்டவணை. (பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியன)

14 நூல்நிலையங்களினதும் வாசகசாலைகளினதும் அட்டவணை.

15 கோவிற் சிற்பிகளின் பெயரும் விலாசமும்.

16 சங்கீத வித்துவான்களினதும், சங்கு வாத்தியத்தில் வல்லவர்களினதும் பெயரும் விலாசமும்.

17 பூமாலை கட்டுபவர்களின் பெயரும் விலாசமும்.

18 விக்கிரகங்கள், வாகனங்கள் செய்யக்கூடியோரின் பெயரும் விலாசமும்.

19 சோதிடரின் பெயரும் விலாசமும்.

20 புராண படனஞ் செய்யக் கூடியவர்களின் பெயரும் விலாசமும்.

21 இந்தியா, மலாயா முதலிய இடங்களில் மேற்காட்டிய விபரங்கள் கொண்ட அட்டவணைகள்.

சைவத்தொண்டு புரிபவர்கட்குத் துணையாக இக்கடிதத்தை வெளியிடுகிறேன். இக்காலம் சைவத் தொண்டு புரிபவர்கட்டு மேற்படி விபரங்கள் போதியளவு கிடையா. சைவ மக்களின் நன்மை கருதி இவை வேண்டப்படுவதால் சைவ நன்மக்கள் இவற்றை எழுத்துமூலம் எமக்குத் தெரிவித்து உதவுவார்களாக.

இவற்றோடு சேர்க்கவேண்டிய வேறு விபரங்கள் இருப்பின் அவற்றையுந் தெரிவிக்கும் வண்ணம் மிக்க விநயத்துடன் வேண்டிக் கொள்கிறேன்.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்

யாழ் கரஹூ ஆனிமீ உஉவ வெள்ளிக்கிழமை

## ஆயுர்வேத முறை அபிவிருத்தி

இந்த இலங்கையிலே பிருத்தானியர் பரிபாலன காலத்திலும், அதற்கு முந்தியாக பிந்தியாக எக்காலத்திலும் சுதேச வைத்திய முறையெனப்படும் ஆயுர்வேத வைத்திய முறையும் சித்த (தமிழ்) வைத்திய முறையுமே மக்களால் அதிகமாகக் கைக்கொள்ளப்பட்டு வந்தனவெனலாம். ஆனல் இலங்கை சுயாதீனமடைந்த சில வருடங்களாக, சுதேச வைத்தியம் இலங்கை மக்கள் பலரால் அபிமானித்துக் கைக்கொள்ளப்பட்டு வருவதோடு திறமை விருத்திகளும் அடைந்து வருகின்றன. பிருத்தானியர் இலங்கைப் பரிபாலனத்தின் பிற்காலத்திலே கொழும்பில் ஒரு ஆயுர்வேதக் கலாசாலை அரசினரால் ரூபித்து நடத்தப்பெற்று வந்ததெனினும், சிரமப்பட்டுப் பொருள் செலவிட்டுக் காலம்போக்கி வைத்தியக் கல்வியைப்படித்துத் தேறுதற்கு இலங்கையிலுள்ள வாலிபர் பலர் முற்பட்டிலர்; அவர்களெல்லாரும் மேனுட்டு வைத்தியக் கல்வியைக் கற்று இங்கிலாந்துவரையிற் சென்று டக்ரர் பட்டம் பெறவேண்டுமென்ற நோக்கம் பூண்டாராய் அப்படியே செய்து வந்தார்கள்; ஆனல் அயல்நாடாகிய இந்தியா பல்லாண்டுகளாக ஆங்கிலர் பரிபாலனத்திற் கிடந்ததெனினும், அந்நாடு மேலைத் தேச வைத்தியமோகம் அதிகங்கொள்ளாது, சுதேச வைத்திய முறைகளாகிய ஆயுர்வேத முறை, சித்த (தமிழ்) வைத்திய முறை, யூனனி வைத்திய முறையென்னும் மூன்றினையுமே பிரதானமாகக்கையாண்டு வந்தது. (யூனனி வைத்தியம், இஸ்லாமியர் கண்டுள்ள பழைய வைத்திய முறையென்பர்); சுதேச வைத்தியம் இந்தியாவில் எக்காலத்தும் விருத்தியடைந்து வந்தமைக்குக் காரணம், இந்தியாவின் பிரதான பட்டினங்களாகிய கல்கத்தா, பம்பாய், சென்னை, டெல்கி முதலாம் பலவிடங்களிற் சிறந்த சுதேச வைத்தியக் கல்லூரிகள் வைத்து நடாத்தப்பட்டு வருதலேயாகும்; இலங்கையிலுள்ள வாலிபர்களும் சென்னை கல்கத்தா முதலாம் பட்டினங்களிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரிகளிற் சென்று சேர்ந்து கல்விகற்றுத் தேர்ச்சி பெற்றுச் சிறந்த வைத்தியர்களாகத் தம்மூரில் மீண்டுவந்து வைத்தியம் நடத்தி வரலாயினர்.

இக்காலத்தில் இலங்கையரசினரும் சுதேசவைத்தியத்தையே இந்நாட்டிற் கைக்கொள்ளச் செய்ய வேண்டும், விருத்தி பண்ணவேண்டுமென்ற நோக்கமும் ஊக்கமும் கொண்டு செயலாற்றத் தொடங்கியிருக்கின்றனர். இப்பொழுது சுகாதாரப் பகுதி மந்திரியால் நியமிக்கப் பெற்ற சுதேச வைத்தியர்களைப் பதிதற்காகிய சங்கம் 1200 பேர்களை முறையான வைத்தியர்களெனப் பதிவு செய்துவிட்டது; இந்த ஆயிரத்திருநூறு பேருட் பெரும்பான்மையோர் சுதேச வைத்தியக் கல்லூரியிற் கற்றுத் தேறியவர்களாவர்; எஞ்சியவர்களுட் பெரும்பாலானோர் இந்தியாவிலுள்ள ஆயுர்வேதக் கல்லூரிகளிற் பயின்று சித்திபெற்றவர்களும், இங்குள்ள ஆயுர்வேத வைத்திய சங்கத்தாரிடம் தகமைப் பத்திரம் பெற்றவர்களுமாவரெனலாம்; சுதேச வைத்தியஞ் செய்வோருள் இன்னும் பதினாயிரம் பேர்வரையில் தங்களை முறையான திறமை வாய்ந்த வைத்தியர்களெனப் பதிவு செய்து தரல்வேண்டுமென விண்ணப்பப் பத்திரம் அனுப்பியிருக்கின்றார்களாம்; ஆனல், இங்ஙனம் விண்ணப்பம் செய்வோருட் பலர் வைத்தியத்தகுதியற்றவர்களாம்; ஆனல் இப்படிப்பட்டவர்கள் தகைவைத்தியர்களுக்குக் கீழிருந்து திறமையோடு பயின்றவர்களெனக் கண்டாலல்லாமல் இவர்கள் வைத்தியர்களாகப் பதிவு செய்யப்படமாட்டார்களாம்; ஒவ்வொரு வாரமும் 40 பேர்வரை வைத்தியர்களாகப் பதிவு செய்வித்தற்கு விண்ணப்பம் அனுப்புகின்றார்களாம்; ஆனலும் மாகாணத்தலைவர், இல்லையேல் ஊரதிகாரி (D. R. O) என்னுமிவர்களிடம் விண்ணப்பஞ் செய்வோரின் திறமையை உசாவியாராய்ந்தே மேற்படி வைத்திய சங்கம் பதிவு செய்துகொள்கின்றதாம். சில சந்தர்ப்பங்களிற் பதிவுசெய்வித்துக்கொள்ள விரும்பும் வைத்தியர்களை மேற்படி சங்கத்தினர் நேரிற் கண்டு சோதித்துத் திருப்திப்பட்டபின்னரே பதிவு செய்வார்களாம்.

இனி, கொழும்பு நகரசபையாரும் தம் நகரிற் பல ஆயுர்வேத வைத்தியசாலைகளைத் திறந்துவைக்க வேண்டுமென இப்பொழுது நிச்சயித்துள்ளார்; நகரத்திலுள்ள வட்டார அங்கத்தவர்களொவ்வொருவரும் தத்தம் வட்டாரத்திலே ஆயுர்வேத வைத்தியசாலையொன்றைத் திறப்பதற்காய தானத்தை ஆராய்ந்து சொல்லல்வேண்டுமென மேற்படி நகரசங்கத் தலைவர் கேட்டுள்ளாராம்; கொழும்பு நகர எல்லையிலுள்ள வனத்தமுல்லா என்னுமிடத்தில் மாத்திரம் இப்பொழுது ஆயுர்வேத வைத்தியசாலையொன்று நகர சபையார் பொறுப்பிலே தாபிக்கப்பெற்றுள்ளது; புதிய பஸார் வட்டாரத்திலும் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையைத் தாபித்துவிட மேற்படி வட்டாரப் பிரதிநிதியாகிய திரு M. V. பெரிரு முயற்சி செய்கின்றார்; கொழும்பு நகர எல்லையுள் ஆங்கில வைத்திய மருந்துச்சாலைகள் பதினைந்துவரையிருப்பவும், அந்நகரவாசிகள் அவற்றை விட்டு, ஆயுர்வேத வைத்தியசாலையையே அபிமானிக்கின்றார்களாம்; இன்னும் பல வைத்தியர்களைச் சுதேச வைத்தியக் கல்லூரியில் நன்கு பயிலச்செய்து, சிறந்த வைத்தியர்களாக்கி அவர்கள் ஊரெங்கும் வைத்தியஞ் செய்தற்காகிய ஒழுங்குகளைச் செய்யவேண்டுமென்பதும், ஆயுர்வேத முறைப்படி செய்யப்படும் ஒளஷதங்களுக்கு வேண்டிய மருந்துச் சரக்குகளையும் மூலிகைகளையும் அவர்கள் இலகுவிற் பெறுதற்காகிய சௌகரியங்களைச் செய்யவேண்டுமென்பதும் சுதேச வைத்திய சங்கத்தார் இப்பொழுதுகொண்டுள்ள நோக்கமாகும். இங்ஙனமானுற் காலகதியிற் சுதேச வைத்தியம் விருத்தியுறுமென்பதிற் சந்தேகமில்லையாம்.

## உலகம்பலவிதக்கதை

(முற்றொடர் — 12)

### "காரணஞ் சொன்னாலன்றி என்மனம் ஆருது"

கமலா, ராதா, பத்மநாதன் என்னும் மூவரும் பின்னருஞ் சற்று நேரம் ஒருங்கிருந்து பல விஷயங்களைப்பற்றிப் பேசினர்கள், பத்மநாதனும் ராதாவும் பேசும்போதும் விளையாடும்போதும் இவ்விருவருக்குமிடையே அந்தரங்க காதலுண்டென்பதை அபிர்ந்துகொண்டாள் கமலாட்சி; சிறிது நேரஞ் செல்ல ராதா கமலாட்சியிடத்தும் பத்மநாதனிடத்தும் தன் வீட்டிற்குப் போதற்கு அநுமதி பெற்றுக்கொண்டு போனுள்; கமலாவும் பதமநாதனும் ராதாவை உடன்சென்று வழிவிட்டு மீண்டு வந்தார்கள். மீண்டு வந்திருந்த கமலாட்சி சிறிதுநேரஞ் சிந்தனையோடு கூடியவளாய்த் தனக்குள்ளே புன்னகை செய்ய, பத்மநாதன் அவதானித்து "தங்காய், ஏன் சிரிக்கின்றீர்" என்று இதமாக வினவினன்; "ஒன்றுமில்லையண்ணு, உலகம பலவிதம் என்பதை யுத்தேசித்துச் சிரிக்கிறேன்" என்றுள் கமலாட்சி; 'உலகம் பலவிதமென்ற சிந்தனை இந்த நேரத்தில் வந்ததென்னை? அதனையெண்ணிச் சிரித்ததென்னை? பெண்கள் சிரிப்பினுல அநர்த்தமுய்நேரக்கூடுமெனபார்கள்; பாஞ்சாலி சிரித்தமையினுலன்றே பாரத யுத்தம் மூண்டதென்று சொல்லுவார்கள்; மேலும பெண்கள் தக்க காரணமின்றிச் சிரியார்கள், புன்கை புரியார்கள் என்று சாலங்கண்ட பெரியோர் பகர்வர; தங்காய், என மனத்தைச் சஞ்சலப்படுத்தாமல், புன்னகை செய்தற்குக் காரணமென்ன என்பதை எனக்குச் சொல்லுதி; காரணஞ் சொனனுலன்றி என மனம் ஆருது" என்று பரிவுடன் கேட்டான் பத்மநாதன்; இப்படிப் பதமநாதன் பரிவுடன் வினவக் கேட்ட கமலாட்சி, தான சிரித்த காரணத்தை மறைத்து வைத்து தமயன் மனத்தை வருத்துவது முறையல்லவென நினைத்து உள்ளதைச் சொல்லத் துணிந்தாள்.

### "எறும்பூரக் கற்குழியும்"

"அண்ணு, நான் சிரித்தமை வேறொன்றையு மிட்டல்ல, கல்யாணஞ் செய்வதில்லை, இல்லறத்துப் புகுவதில்லை யென்ற தீர்க்கமான நோக்கங் கொண்டிருப்பவர்களுடைய வாசஸ்தானத்தில், பெண்கள, பெண்களுள்ளுங் கன்னியர், கன்னியர்களுள்ளும் கற்றவர்கள், கற்றவர்களுள்ளும் பெண்மேற் பெண்கள் ஆசைகொள்ளததக்கபோமுது வாய்ந்தவர்கள், இடையிடையே வந்துபோகக் காரணமில்லையே; இதனைச் சிந்தித்துத்தான் சிரித்தேன் அண்ணு" என்றுள். "தங்காய், அப்படி விபரீதமாக என்னையும் அக்கன்னிகையையும் எண்ணிக்கொள்ள வேண்டாம்; எங்களிருவருக்குமிடையிலுள்ள அன்பு தூயது, சகோதர பாசம போன்றது" என்று சமாதானஞ் சொன்னுன் பதமநாதன; "அண்ணு, நீங்கள் சொல்வதைத் தட்டிபபேசுகிறேனென்று குறையெண்ணுதிர்கள்; சகோதரி முறைபூண்டார், தாய்முறை பூண்டார்கட்கிடையேயுள்ள காதல் தூய காதலாகவிருக்குமேயொழிய, பருவமுள்ள ஆடவர் மகளிருக்கிடையே நேருங் காதல் ஆரம்பத்திலே தூயதாகுமெனினும், காலகதியிற் காமக் காதலாகவே முடியுமென, அறிவமைந்த எங்கள் பெரியோர்கள்.

"பகர்ச்சி மடவார்
பயிலநோன் பாற்றல்
நிகழ்ச்சி தருநெஞ்சத்
திட்பம் - நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப்
பேதாய்! பலகால்
எறும்பூரக் கற்குழியுமே"

என்று பாடியிருக்கின்றார்கள்? இப்படியான சகவாசம் நாளடைவில் விபரீதமாக முடியுமென்றுதான் நினைக்கிறேன்; இப்போதைக்குக் கல்யாணமின்றியிருப்பதே உங்கள் வதநோக்கமானுல், இப்படியான பெண்கள் சகவாசத்தை வைத்துக்கொள்வது அழகாயிராதண்ணு; அல்லாமலும் அந்தப் பெண் நீங்கள் தனியேயிருக்கும் இந்த இடத்திற்கு வந்துபோவது பார்ப்பவர்களுக்குச் சந்தேகத்தை விளைத்தலுங் கூடும்; காணவேபன்னக்கீழ் ஆப்பால் குடிக்கினுங் கள்ளேயென்பார்; ஏதோ நான் உங்கள்மேல் வைத்த விசுவாசத்தினுல இப்படியெல்லாஞ் சொல்லத் துணிந்தேன்; நான் சொல்வதைக் குறையாக எண்ணமாட்டீர்களென்பதையும், எனக்கு நீங்கள் பொய்சொல்லமாட்டீர்களென்பதையும் நான் நன்கறிவேன்; ஏதோ எதையும் யோசித்துச் செய்யுங்கள் அண்ணு" என்று கவலையோடு கூறிமுடித்தாள் கமலா.

### "தன்னெஞ்சே தன்னைச் சுடும்"

இவற்றையெல்லாம் அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த பதமநாதன் சிறிதுநேரஞ் சித்திரப்பாவைபோல யாதும்பேசாது யோசித்தவண்ணமிருந்தான்; "எனக்கு நீங்கள் பொய்சொல்லமாட்டீர்களென்பதை நான் அறிவேன்" எனக் கமலாட்சி சொல்லிய வார்த்தை அவனது உள்ளத்தைப் பெரிதும் உபாதித்தது; "தனக்கு நான பொய் சொல்லமாட்டேன என்று தீர்க்கமாய் நம்பியிருக்கும் என அருமையான தங்கைக்கு நான பொய்சொல்லத் துணிவதும், உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுவது

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# : வானவில் :

○ கலாமந்திரன் ○

● வித்தியாதிகாரியாகிய டக்டர். H. W. ஹாவ்லிற் குயாழ்ப்பாணப்பகுதியிலுள்ள தலைமை உபாத்தியாயர்களை வினைய ஆசிரியர்கள் முதலானோரைச் சென்றவாரம் யாழ்ப்பாண நகரமண்டபத்திலே உபசரணைவிருந்துக்கூட்டமொன்று நடத்தப்பட்டது; அதிற் சமுகமாயிருந்த முடிக்குரிய கியாயவாதியாகிய திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை "யாழ்ப்பாணத்தவர்கள் ஆழியுடையவர்கள்" என்னுங் கருத்தமைமையக் குறிப்புக் கூறினாராம்.

● இருபத்தொரு வயதிற்குக்கீழ்ப்பட்ட ஆண்கள் அதிகாரிகளுடைய அனுமதிச்சீட்டின்றிக் கள்ளையேனுஞ்சாராயத்தையேனும்வைத்திருக்கவொண்ணாதெனவும், பெண்கள் எத்தவயதினரெனினும் இம்மதுபானங்களை அனுமதிப்பத்திரமின்றி வைத்திருக்கவொண்ணாதெனவும், இப்பொழுது சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணத்தினால் பாலயமற்ற ஆண்களும், பெண்களும் மதுபானஞ்செய்யாமல் தடுத்தல் முடியுமா? இவர்கள் தங்கள் வயிற்றினுட் சாராயத்தைவிட்டு வைக்கவொண்ணாதெனச் சட்டம் பிறப்பின், அதனும் சில நன்மையுண்டாகும்;

● "நான் தற்கொலை செய்யவேணுமென்று ஆற்றிற் குதிக்கவில்லை, சென்ற 5 ஆண்டுகளாக என் பெற்றோர் எனக்கு கிட்டுரஞ் செய்து வருவதனால் நான் அவர்களுக்கொளித்துவிட்டைவிட்டுப்புறப்பட்டுப் பாலத்தின் மேலாக ஓடும்போது கால் தவறி ஆற்றில் விழுந்துவிட்டேன்" என்று கொண்டிகொண்டு நடந்துவந்த கறுசலீனு என்னுமிடத்தில் வசிக்கும் ஜனசிரு என்னுஞ் சிங்கள இளம் பெண் மாத்தளை நீதிஸ்தலத்திற் கூறினாளாம்; அவள் சொன்னது நிசமென்று அவளுடைய தாயுஞ் சாட்சிஞ் சொன்னாள். பொலிசார் குறித்த யுவதி தற்கொலை செய்ய எத்தனித்தாளென்று குற்றஞ் சாட்டி அவளுக்கு மாறாக வழக்குத் தொடர்ச்ததிடத்திலேயே இவ்வாய்ப்பிறப்பு வெளிப்பட்டதாம்.

● இலங்கையின் உபயோகத்திற்காகிய நாணயங்களைக்கொண்ட 1000 பெட்டிகள் கல்கத்தாவினின்று சென்றவாரம் கப்பல் மார்க்கமாகக் கொண்டுவந்து கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. இறக்குமதி செய்யும்போது அரசினருக்குரியனவாகிய பல "லொறி"களிற் பெருந்தொகையான பொலிசாரின் காவலுடன் இறக்கி அரசினர் பொக்கிஷசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனவாம். இலங்கை அரசினரின் வேண்டுகோளுக்கிணங்கி கல்கத்தாவிலுள்ள நாணயசாலையில் இவை அச்சடிக்கப்பட்டனவாம்.

## உலகம் பலவிதக்கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாரா துரோகமாகும்; அல்லாமலும் தன்னுயகனிருக்கும் பதியைவிட்டுத் தன்னூரிலிருக்கவந்த என் சகோதரி, தனது சிரமத்தைப் பாராமல், கணவனுடைய அனுமதி பெற்றுக் கொண்டு நானிருக்குமிடத்தே வந்துள்ளாள்; இவருக்கு நான் பொய் சொன்னால் என்னைமே என்னைச் சுடும், 'தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின், தன்னெஞ்சே தன்னைச் சுடும்" என்று வள்ளுவர் கூறியுள்ளாரல்லவா; ஆதலால் நான் என் தங்கைக்கு நிசத்தையே சொல்லிவிடல் வேண்டும்; அப்படிச்சொல்வதனால் எனக்கேதும் துன்பம் நேர்ந்தாலும் என் சகோதரி மனம் வருந்தினாலும் பரவாயில்லை; நம்பினவர்களுக்கு இரண்டகஞ்செய்யவொண்ணாது" என்றிப்படியெல்லாம்யோசித்துக்கொண்டுகமலாவைப்பார்த்து கெட்டுயிர்ப்போடு பின் வருமாறு சொல்லலாயினாள்:- 'என் அன்பான தங்காய், உடன்பிறந்தோருக்குள்ளே மேலான சகோதரியே, நீ எனக்கிளையவளெனினும் நீ என் மேல் வைத்துள்ள விசுவாசங்காரணமாக உனக்குப்பயந்து சில உண்மைகளை உனக்கு மறைத்துவிடலாமென்றெண்ணினேன்; ஆனால் உன்மேல் நான் வைத்த விசுவாசமும் என்மேல் நீ கொண்டுள்ள நம்பிக்கையும் உண்மையை உனக்கு மறைக்க என்னை விட்டில; நான் உண்மையைச் சொல்லப் புகும்போது உன மனம் வேதனைப்படவும் நேரும்; ஆனால் அவைகளையெல்லாம் பொறுத்துக்கொள்; என்னை வெறுத்துவிடாதே சொல்லட்டுமா" என்று சிந்தையோடு கேட்டான் பத்மநாதன். "சொல்லுங்களண்ணா, செஞ்சைவிட்டுமுழுத்தொரு வஞ்சகமில்லை" என்றாள் கமலாட்சி.

### 'சீதனம் போதாது'

"தங்கைச்சி, வனசாவிடத்தில் நான் மெய்யன்பு வைத்திருந்தது; அவளும் இன்றைக்கு என்னையே மணம் என் மீது தீராத விசுவாசம் வைத்துக்கொண்டிருக்கின்றாள் என்பது உண்மை; வனசாவில் நான் ஒரு குற்றமுஞ் சொல்ல முடியாது; அவள் உத்தமி; பேரழகுடையவள்; பெண்மைக்குரிய கலைகளெல்லாம் ஒருங்கமைந்தவள்; ஆனால் இரண்டொரு குறை கள் தாம் வனசாவிடத்திலுள்ளன; அவற்றை உனக்கு நான் சொன்னால் நீ என்னை எவ்வாய் வெறுப்பாய் என்று பயப்படுகிறேன்" என்று கூசிக்கூசிக் கூறினான் பத்மநாதன்; 'அண்ணா நீங்கள் உங்களுடைய உள்ளக்கிடக்கையை, ஒளிமறைவின்றித் தொண்ட விசுவாசங் காரணமாகச் சொல்லத் துணிந்தபோது, நான் ஏன் அண்ணா உங்களை வெறுப்பேன்? வெறுக்கப்போகிறேன்; ஒன்றற்கும் யோசியாமல் உள்ளதைச் சொல்லுங்கள்" என்று மனச் சஞ்சலத்துடன் சொன்னாள் கமலாட்சி; "வேறொன்றுமல்ல, தங்காய், வனசாவிடத்தில் இக்காலத்திற்கேற்ற உயர்தரக் கல்வியில்லை; அல்லாமலும் சீதனமும் போதாது; சொந்தமைத்துனியென்ற காரணத்தினால் சீதனத்தைப் பொருட்படுத்தாமல், தருவதைப் பெற்றுக்கொண்டு கல்யாணஞ் செய்துகொண்டாலும், கல்வி காணாதே, அதற்கென்ன செய்வது; இங்கு வந்துபோகும் ராதாவின் கல்வித் திறமையையும் உத்தியோகமகத்துவத்தையும் நீயே இப்பொழுது நேரிற் கேட்டறிந்துகொண்டாய்; இவைமாத்திரமல்லாமல் ராதா ஒரு செல்வந்தருடைய ஏக புத்திரி; அவர் பெரும் நாட்டாண்மையுடையவர்; இவளுக்கு இலட்சக்கணக்கிற் சீதனமாகக்கொடுக்க இவள் தகப்பனார் சம்மதித்திருக்கிறார்; அல்லாமலும் ராதா என்னையன்றி வேறெவரையும் மணஞ் செய்வதில்லையெனப் பிடிவாதஞ் செய்கிறாள்; நான் அவளை விட்டாலும் அவள் என்னைவிடாள்போற் காணப்படுகிறது; அல்லாமலும், கலைமகளும் அலர்மகளும் ஒருங்கு சேர்ந்தாற்போல வரும் ராதாவை வேண்டாமென்று வெறுக்க எந்த ஆடவனுக்குத்தான் மனம் வரும்; தங்காய்இதுதான்என்இப் பாதைய நிலைமை' என்று கவலையோடுசொன்னான் பத்மநாதன். (வரும்)

## நல்லூர்க் கிராமச் சங்கம்

### புதிய தலைவர் தெரிவு

இன்று நடைபெற்ற மேற்படி கிராமச் சங்கத் தலைவர் தெரிவில் போட்டியிட்டவர்களாகிய திருவாளர்கள் K. கார்த்திகேசுவும் K. செல்லையாவும் தனித்தனி ஆறு சம்மதச் சீட்டுக்கள் பெற்றபடியால் அவர்களின் தெரிவு காணசம் எறிந்து திரு. K. செல்லையாவுக்குச் சார்பாகவே காணசம் விழுந்தது. திரு. R. சின்னத்தம்பி உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். உள்நாட்டு நிர்வாக உதவிக் கமிஷனர்தெரிவைநடாத்தினர். —நிருப.

## உரும்பராய், சைவத்தமிழ்வித்தியாசாலை

1950-ம் ஆண்டில் இலங்கை வித்தியா பகுதியாரால் நடாத்தப்பெற்ற ஐந்தாம் வகுப்பு வித்தியா வெகுமதிப் பரீட்சையின் பேறாக, அரசினர் மத்திய கல்லூரியிற் கல்வி பயில வெகுமதி பெற, மேற் குறித்த வித்தியாசாலையிலிருந்து மூன்று மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இப்பாடசாலை, சென்ற பல ஆண்டுகளாகப் பல மாணவர் வித்தியா வெகுமதியைப் பெறப் பெரிதும் உழைத்துள்ளமை மிகுதியும் பாராட்டத்தகுரியது. —நிருப.

# திருச்சி ரேடியோ

### திருச்சி செவ்வாய் ஜூலை 10

காலை 7 10 தோற்றம் 7 15 தமிழில் செய்தி 7 30 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 இசைவேளை* 1 30 ஆங்கிலத்தில்செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 இரு குரலிசை* 2 தமிழில்செய்தி 2 10 பவித்ரா சடர்ஜி வித்தார்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 டி ஜி சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 எம் ஆர் தர்மாம்பாள் பாட்டு 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 மன்னார்குடி ராஜகோபால பிள்ளை பாட்டு 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 டி ஜி சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.

### திருச்சி புதன் ஜூலை 11

காலை 7 10 தோற்றம் 7 15 தமிழில் செய்தி 7 30 தென்காசி பி கே ராஜையா பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 டி சௌடையா வயலின்* 2 தமிழில் செய்தி 2 10 பின்னல்லா கோஷ்டி கதம்பம்* 2 15 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 என் பி நடராஜன் புல்லாங்குழல் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சொல்லம் 7 45 மானாமதுரை — பேச்சு 8 இளை இகலர் சந்நாடகம் 8 15 என் பி நடராஜன் புல்லாங்குழல் 8 30 குரல்வளை* 9 ஆங்கிலத்தில்செய்தி 9 15 தென்காசி பி கே ராஜையா பாட்டு 10 முடிவு.

### திருச்சி வியாழன் ஜூலை 12

காலை 7 10 தோற்றம் 7 15 தமிழில் செய்தி 7 30 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப்பள்ளிகளுக்கு 1 டி ஆர் மகாலிங்கம்* 1 15 பெண்ணுலகம் 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 லக்ஷ்மி லோகசுப்ரமணியம்* 2 தமிழில் செய்தி 2 10 புல்லாங்குழல், மண்டோலின்* 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு

5 30 அப்துல்கனி வித்தார் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 பஜனை பாடல்கள் 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 நிலையகானம்* 8 எனக்குப் பிடித்த கவிஞர் வ எம் சரவண முதலியார் — பேச்சு 8 15 ராகம், தானம், பல்லவி டி என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் வி கோவிந்தசாமி நாயக்கர் வயலின் மதராஸ் வ கண்ணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 10 முடிவு.

### திருச்சி வெள்ளி ஜூலை 13

காலை 7 10 தோற்றம் 7 15 தமிழில் செய்தி 7 30 என் வி ருக்மிணி பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 நடுத்தரப் பள்ளிகளுக்கு 1 கதம்பம்* 1 30 ஆங்கிலத்தில் செய்தி 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 எஸ் ஜி கிட்டப்பா* 2 தமிழில் செய்தி 2 10 வி ஜி ஜோக் வயலின்* 2 15 உயர்தர பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு

5 30 பாண்டமங்கலம் எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்தி 6 10 அறிவிப்புகள் 6 15 நீங்கள்கேட்டவை* 6 30 கிராமநிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 மாதர்க்குள் ஒரு நாடகம் 7 45 சமுதாயப் பெட்டி 8 என் வி ருக்மிணி பாட்டு 8 30 குரல்வளை* 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 பாண்டமங்கலம் எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 10 முடிவு.


வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

## திறமான தேக்கமரங்கள்

பல நீளங்களிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2

# தமிழ் நாட்டுப் பெண் கவிகள்

( A. C. ஷண்முகமயிலு B. A., B. L. )

## ஒளவையார்

தமிழ்நாட்டில் ஒளவையார் பாட்டியைத் தெரியாதவர்களில்லை. சிறுவர், கிழவர், ஆண், பெண், மாணவர், தொழிலாளி, அறிஞர், கல்லாதவர் யாவரும் அறிவர். தமிழ்நாட்டுக் குடும்ப வாழ்க்கையிலேயே அவள் கலந்து நிற்கின்றாள். சிறு குழந்தை அழும்போது வெண்ணிலவைக் காட்டி அதில் கறுப்பாயிருக்கும் பாகத்தை ஒளவைப்பாட்டி படுத்திருக்கிறாள் என்று அழுகை அமர்த்துவாள் தாய். ஆரம்பப் பள்ளியில் முதற்பாடம் 'அறஞ் செய விரும்பு' 'ஆறுவது சினம்' என்ற அவர் இயற்றிய ஆத்திசூடியைக் கற்றுக்கொடுப்பார்கள். குழந்தைகள் மனப்பாடஞ் செய்வதற்கு ஆத்திசூடியே ஏற்றதால். பின்னர், மாணவ மாணவிகள் இவரியற்றிய 'மூதுரை' 'நல்வழி' என்ற நூல்களைப் பயில்வார்கள். அறிஞர் இவர் பாக்களில் உலக நீதியையும் தத்துவக் கருத்துக்களையும் கண்டு மகிழ்வார்கள். பெண் மக்கள் ஒளவையார் போன்று இருப்பார்கள். இவ்விதமாக அவள் தமிழுடன் மிக நெருங்கிய உறவுடையவளாயிருக்கின்றாள்.

இவளுடைய பிறப்பு வளர்ப்புத் திட்டமாக ஒன்றுங் கூற இயலாது. சோழநாட்டில் உறையூரில் பகவன் என்பவனுக்கும் ஆதி யென்பவளுக்கும் பிறந்ததாகக் கூறுவது ஓர் பரம்பரைச் செய்தி. இது உண்மையானால் இவள் திருவள்ளுவர், கபிலர், அதிகமான், உப்பை, உறுவை, வள்ளியம்மை யென்பவர்களுக்குச் சகோதரியாகும். பிறந்தவுடன் பெற்றோர் பிரதிக்கினையின்படி தாய் இவளை விட்டு நீங்க முடியாமல் மயங்கும்போது ஒளவையார் பாடியதாக இப்பாட்டு வருகின்றது.

இட்டமுடன் என் தலையில்
இன்னபடி யென்றெழுதி
விட்ட சிவனுஞ் செத்துவிட்டானோ — முட்ட முட்டப்
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கு
அன்னாய்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

அன்னையே! பழவினையின் பிரகாரம் என் தலையில் இன்னபடியென்றெழுதிய சிவபிரான் இறந்து போய்விடவில்லை. கொடிய பஞ்சமென்றாலும் என்னைக் காப்பது அவன் பொறுப்பாதலால் நீ மனதில் பயப்படாதே என்று தன் தாயைத் தைரியப்படுத்தியதாக இப்பாட்டின் பொருள். இப்பாட்டிலிருந்து ஒளவையார் வயதிற் சிறியவளாயினும் அறிவிற் பெரியவளென்றே கொள்ளவேண்டும்.

ஒளவையார் பாணர் வீட்டில் வளர்க்கப்பட்டதாயும் இவளுக்கு ஓர் மணமகனை நிச்சயித்து மணக்காலத்தில் இவள் மணமகன் கொடுத்த சேலையையுடுத்திக் கிழவுருவந் தாங்கி வரவே, மணமகன் கிழவியை மணக்க மறுத்துவிட்டானெனவும், பின்பு ஒளவையார் மணமில்லாதவளாய் வாழ்ந்தாளெனவுஞ் சிலர் கூறுவர். இவள் வாழ்ந்த காலம் 3-ம் சங்ககாலத்திற்குப் பின் கம்பர் - ஒட்டக்கூத்தர் - புகழேந்தி முதலியோர் காலமென்று ஒரு சாராரின் கொள்கை. காலமோ, குலமோ வாழ்க்கையோ எவ்வாறாயினுஞ் சரியே. இவற்றின் ஆராய்ச்சி முக்கியமல்ல. ஆனால் ஒளவையார் சேர சோழ பாண்டிய தொண்டைநாட்டு மன்னர்களாலும் புலவர்களாலும் பெருஞ் செல்வர்களாலும் புகழ்ந்து பாராட்டற் குரியதோர் சன்யாசியாய்த் திகழ்ந்தாரென்பது பல நூல்களினின்றும் அவளைப்பற்றிய கதைகளினின்றுந் துலங்குகின்றது.

ஒளவையார் ஓர் சிறந்த சிவபக்தர். விநாயகக் கடவுள்மேல் மிகுந்த பற்றுடையவர். சேரமான் பெருமான் நாயனார் திருக்கைலாயத்திற்குச் செல்லும்போது ஒளவைப் பிராட்டியையுந் தம்முடன் அழைக்க இவள் அந்நாயனாருடன் கூடப் போவதற்காக விநாயகர் பூசையை விரைவில் முடிக்க நினைத்தார். விநாயகர் இதை யறிந்து 'மெதுவாகப் பூசை செய். அவருக்குமுன் உன்னைக் கைலாயத்திற் சேர்க்கிறேன்' என்று கட்டளையிட, ஒளவையார் 'சீதக்களப' என்னும் விநாயகர் அகவல்பாடித் துதித்தனர். விநாயகப் பெருமான் தனது துதிக்கையினால் ஒளவையாரை யெடுத்துக் கைலாயத்தில் சேரமான் சேருமுன் விடுத்தனர் என்ற ஆச்சரியமான ஓர் கதையுண்டு.

ஒளவையார் இயற்றிய நூல்கள் 'ஆத்திசூடி' 'கொன்றைவேந்தன்', 'மூதுரை' 'நல்வழி' 'விநாயகரகவல்' என்பன. தனிப் பாடல்கள் எத்தனையோ உள்ளன. இவளைச் சரசுவதியின் அவதாரமென்று சிலர் கருதுகின்றனர். விநாயகரகவல் தவிர மற்ற நான்கு நூல்களும் நீதி நூல்களாகும். "வாழ்க்கைக்கு இன்றியமையாத நிறைந்த பொருள் நுட்பங்களும் பயிற்சிக்கு இனிமையான உயர்ந்த புலமை நுட்பங்களும் உலகிற் செயல் வன்மைக்கு ஏதுவான சிறந்த கருத்துநுட்பங்களும் வாழ்க்கையை முடிவில் அருள் நிலைக்கு ஏற்றி உய்விக்கும் விரிந்த ஞான நுட்பங்களும் இவை உடையன" வென்று அறிஞர் புகழ்கின்றனர். ஒளவையார் குழந்தை உள்ளம் உடையவர். அதனால் அவர் குழந்தையுள்ளத்தை நன்கறிந்தார். அறிவில் முதிர்ந்த இப் புலவர் குழந்தைகளுக்கேற்ற நூல்களை இயற்றினார். குழந்தையுள்ளம் குழந்தையுள்ளத்தை இழுப்பதால் குழந்தையுள்ளம் நிறைந்த ஒளவையார் குழந்தைகளுக்காகப் பாடிய பாடல்களை குழந்தைகள் மனங்குழைந்து கற்று மனப்பாடஞ் செய்கிறார்கள். அப் புலவர் பெருமாட்டியை அருமையாகப் போற்றி வருகிறார்கள். ஒளவையென்றால் குழந்தைகளுக்குத் தனி விருப்பம். பெண்களுக்கோ ஓர்தனிப் பிரேமை. இவருடைய கனிந்த உள்ளத்தின் பெருமையாலும் உயர்ந்த மதியாலும் எளிய பாக்களிற் றந்தமையாலும் வயதும் அறிவும் நிரம்பிய பெண் மக்களை ஒளவையாரென்று உபசாரமாக அழைப்பதைத் தமிழ்நாட்டில் இன்றும் காண்கின்றோம். தனிப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஓர் கதை அல்லது நீதியமைந்திருக்கும் ஒரு பாடலைப் பார்ப்போம்.

— தொண்டன்.

## வித்தியா மந்திரி

இலங்கை வித்தியா மந்திரியாகிய திரு. F. A. நுகவெலை, சில மாசங்களாக இங்கிலாந்திற் சென்றிருந்தவர் சென்ற சனிக்கிழமை இங்கு மீண்டு வரலாயினர்.

# சைவமுந் தமிழும் வளரத் துணை செய்த பல்லவர்கள்

— பண்டித புலவர், த. வடிவேலு —

இரண்டாயிரமாண்டுகட்கு முன்பிருந்த தமிழகத்தைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். அவ்விலக்கியங்கள் எழுந்த காலமே தமிழன் தன்னரசுடன் ஆண்டகாலம். கி. பி. 200-ல் தமிழ்நாட்டில் குழப்பநிலை ஏற்படலாயிற்று. கி. பி 600 வரை களப்பிரரின் ஆட்சியே தலைகாட்டியது. கி. பி. 6-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தமிழ்நாட்டில் பல மறுமலர்ச்சிகளேற்படலாயிற்று. கி.பி. 575-ல் ஆரம்பமான சிம்மவிஷ்ணுவின் ஆட்சியே பல்லவரின் சிறப்பிற்குக் காரணமாயிற்று. சோழருடிக்கத்தைக் கெடுத்துச் சோழ அரசைக் கவர்ந்தோன் சிம்மவிஷ்ணுவே எனச் சாசனங்கள் பகர்கின்றன. கும்பகோணத்திலுள்ள பட்டயமும், புதுக்கோட்டைச் சித்தன்ன வாசல் குகைக் கோயிலும் சோழ நாட்டைப் பல்லவரே ஆண்டனர் என்பதற்குச் சான்றாக அமைகின்றன.

சிம்மவிஷ்ணுவின் மகனே மகேந்திரவர்மன். இவனது ஆட்சி கி. பி. 600-ல் ஆரம்பமாகியது. இவனாட்சிக் காலமே சைவம் உயர்நிலையுடையது என்பது உலகினுக்கு விளங்கிய காலமாகும். அன்பு உண்மை என்ற இரண்டும் அவர்களது வாழ்விலே நிலைபெற்று விளங்கியது. சமணர்களுமே உயிர்க்கொலையை வெறுத்தனர். புலாலுணவை விட்டனர். இவைகளே மனிதவாழ்வின் விலங்கு நிலையடைவிப்பன எனக் கருதினர். கொலை களவு பொய் கள் காமம் என்ற ஐந்துமே அவர்கள் வாழ்விற்கு மாறுபாடாக விளங்கின. இவ்வைந்திற்கும் முதற்காரணமாக விளங்குவது காமமே எனக் கொண்டனர். அக்காமத்தைப் பெருக்குங் கருவிகளான இசையையும் நாடகத்தையும் வெறுத்தொதுக்கினர். ஏன் இன்றுமே சங்கீதம் இறைவனையே மகிழ்விப்பதென இராவணன் சரிதையும், அடியார் வரலாறுகளையுங்காட்டி ஒரு சிலர் வாதிடினும் மனிதன் மதியைக் கெடுத்துக் காம இச்சையை வளர்த்து மனிதனை விலங்கு நிலைக்குக் கொண்டுவந்து விடுகிறதென்பதை அனுபவத்தில் காண்கிறோம். நாடகம் சங்கீதம் ஆகியவற்றால் காம இச்சை வளர்கிறது. காம இச்சையை நிறைவேற்றுவதற்குக் கொலை, களவு, பொய், கள் ஆகியன துணைக் கருவிகளாக அமைகின்றன எனவே ஐந்து பாதகங்களுக்கும் நடனமும் சங்கீதமுமே முக்கிய காரணங்களாக விளங்குகின்றன என்பதனை மறுப்பதற்கில்லை.

சங்க காலத்திலுமே புலாலுணவு, மது ஆகியன தமிழர் வாழ்வில் இடம்பெற்றன என்பதைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. ஏன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முன்பெழுந்த வள்ளுவன் குறள்களுமே அதனை வலியுறுத்துகின்றன. இதனை நோக்குமிடத்துச் சமணர்களை நமது சமய ஆசிரியர்கள் எவ்விதம் வெறுத்துப் பேசினும் சமணரே தமிழகத்தின் உண்மைச் செல்வத்தை உய்வித்தோர் எனறே கூறவேண்டும். தமிழருக்குத் தமிழ்மறையை அளித்த முதல்வனும் நாவுக்கரசனே சமணரின் கொல்லாமை விரதங்கண்டு சமணத்தைச் சார்ந்தானென வரலாறு கூறுகிறது. அவர் சமணத்திலிருந்து மீண்டமைக்கும் அச்சமயத்தின் மேற்கொண்ட வெறுப்புக் காரணமாகக் காட்டப்படவில்லை. அவரைப் பீடித்த நோயே காரணமாகக் காட்டப்படுள்ளது. சமண சமயத்தில் புகுந்த நாவுக்கரசரின் வயிற்றுவலியே சைவருக்குச் சமயப் பாடலை அளிக்கிறது; வயிற்றுவலியால் துன்புற்ற நாவுக்கரசர் "கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமை பலசெய்தன நானறியேன்" என்று தொடங்கும் பாவை முதலாகவுடைய பதிகத்தைப் பாடி நோய் நீங்கப்பெற்றார். நாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்துக்கு மீண்ட காலம் கி பி. 612 வரையில் இருக்கலாமென ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். அவ்விதமானால் சைவருக்குத் தமிழ்மறை கிடைத்த காலமும் கி. பி. 612 ஆகும். இவரைத்தொடர்ந்தே கி. பி. 639 - 654 ல் வாழ்ந்த ஞானசம்பந்தரும், அதன் பின்பு வாழ்ந்த சுந்தரரும் மணிவாசகரும் இறைவன்மீது தமிழ்ப் பாமாலை புனைந்தார்கள் என அறிகிறோம். மகேந்திரவர்மன் திருநாவுக்கரசருக்குச் செய்த இன்னல்களே சைவத்தின் உயர் நிலையை உலகினுக்கு விளக்கக்காரணமாயின. ஏன் மகேந்திரவர்மனுமே சைவத்தினுயர்வுணர்ந்து நாவுக்கரசரைத் தஞ்சமாக அடைந்து வல்லம், தளவனூர், சீயமங்கலம், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன்கோயில்களை எடுப்பித்தானென்ற செய்திகளே பல்லவர்களே சைவ வளர்ச்சிக்கு உதவினர் என்பதற்குப் போதிய சான்றாகும். திருச்சிராப்பள்ளிமலைக் கோயிலமைத்த "லிங்கத்தை வழிபடுங் குணபரன் என்னும் பெயர்கொண்ட அரசன் இந்த லிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம், உலகத்தில் நீண்டகாலம் நிலைநிற்பதாக" என்றசெய்தியே மகேந்திரன் சமணத்திலிருந்து மாறிச் சைவனாகிச் சைவத் தொண்டு புரிந்தான் என்பதை வலியுறுத்தும். தமிழ்நாட்டினரை உண்மைத்துறவின் வலித்து மணமிலாத் துறவினைக் கைக்கொள்ளுமாறு செய்தனர் என்றவொன்றேயன்றி, சைவத்தையுந் தமிழ் நாட்டையும் உயர்நிலைக்குக் கொணர்ந்தோர் சமணரே என்பதை எவரும் மறுத்தலரிதாகும். தெய்வப் பாடலையளித்த சீரியோர் வாழ்க.

**உண்மை பேசு**
**நன்மை பெறுவாய்**

## கதிர்காம யாத்திரிகா தங்குதற்கிடம்

கொழும்பிலுள்ள கதிர்காம யாத்திரிகர் கொண்ட சபையார், யாத்திரிகர்கள் பல திசைகளிலிருந்தும் வந்து கொழும்பு கண்டு கதிர்காமத்திற்குப் போகவேண்டியிருத்தலினால், அவர்கள் சௌகரியமாகத் தங்குதற்கான ஒரு தங்குமடத்தை மருதானையிலுள்ள கப்பித்தான் தோட்டச் சிவன்கோயிலுக் கணித்தாகக் கூடிய சீக்கிரத்தில் ஒழுங்கு செய்வார்களாம். இங்கு யாத்திரிகர்களுக்கு அன்னதானமும் வேண்டிய உதவியுங் கிடைக்குமாம்.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residin at 245 Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietor the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiv Perakasa Press, Vannarpannai, Jaffna, on Tuesday July 10, 1951